ஆண்டு நேரடியாகக் கவனித்து, விவசாயிகளுக்குப் பாதுகாப்பு கொடுப்பதற்கும் என்ன, என்ன நெல் விதைகள் தற்போது வழங்கப்படுகின்றன என்பதையும் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இப்பொழுது நம்முடைய விதைப் பண்ணைகளிலே தயாரிக்கப் படுகிற விதைகளை மட்டுமே வழங்கக்கூடிய அளவு நிலைமை இல்லை. தனியார் பண்ணைகளிலே தயாரிக்கப்படுகின்ற, சான்றிதழ்கள் பெற்ற விதைகள் வழங்கப்படுகின்றன. தேவைக் குரிய விதையை நாம் இன்னும் நிறைவு செய்ய முடியவில்லை. அதனால்தான் புதிதாக இரண்டு விதைப் பண்ணைகள் தொடங்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அவைகள் தொடங்கப் பட்டதற்குப் பிறகு, இந்தப் பற்றாக்குறைகள் நீங்கும் என்று கருதுகிறேன்.

திரு. ந. குலசேகரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வெள்ளைப்பொன்னி நெல்லும் மற்றும் சில உயர்தர நெல்களும் சிங்கப்பூர் போன்ற நாடுகளிலே இருந்து கடத்தப்படுவதாகச் சொல்கிறார்களே, அதை அரசு அறியுமா? அது உண்மையாக இருக்குமானால், அரசு இறக்குமதி செய்து.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிங்கப்பூரிலே விவசாயமே கிடையாது. டிரான்சிஸ்டரா என்ன, சிங்கப்பூரிலிருந்து வருவதற்கு.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நெல் பயிரிடும் இடங்களில் பயிரிடப்பட்டுள்ள ரப்பர் மரங்கள்.

*வினா எண் 536— திரு. டி. மணி திரு. ஜே. ஹேமச்சந்திரன் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் நெல் பயிரிடும் நிலங்களில் ரப்பர் பயிரிடப்படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அடுத்துள்ள நிலங்களில் நெல் பயிரிடும் விவசாயிகள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளார்களா?

(இ) அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) ஆம். குறுகிய பரப் பளவில் அதாவது 38.87 ஹெக்டேரில் ரப்பர் பயிரிடப்படுகிறது.

(ஆ) ரப்பர் தோட்டத்தை அடுத்துள்ள நெல் வயல்களில் இங்கும் அங்குமாக ஓரளவு நிழலினாலும், வேர்களினாலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

(இ) மிகச் சிறிய பிரச்சனையாக இருப்பதாலும் இதன் மீது தனிப்பட்ட நடவடிக்கை எதுவும் தேவையில்லை என அரசு கருதுகிறது.

1982 மார்ச் 18]

திரு. டி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், குறிப்பாக, தோவாளை, அகஸ்தீஸ்வரம், கல்குளம், விளவங்கோடு தாலூகாக்களிலே இருபோக நெல் சாகுபடி செய்கின்ற, நீர்த்தேக்கங்களிலிருந்து முறையாக தண்ணீர் பெறுகின்ற நிலங்களில், ரப்பர் மட்டும் பயிரிடுவதில்லை. அல்பீசியா, தென்னை போன்ற பணப் பயிர்களைப் பயிரிடுவதால் ஏற்கனவே அந்த மாவட்டத்தில் நெல் பற்றாக்குறை உள்ளது, அரிசிப் பற்றாக்குறை உள்ளது. இது பரவி வருமேயானால், மீண்டும் அந்தப் பற்றாக்குறை அதிகமாகும். ஆகவே, அதை கவனத்திலே கொண்டு, முறையாக நெல் சாகுபடி செய்கின்ற, நீர்ப்பாசனம் பெற்று விளைகின்ற நிலங்களில், தென்னையோ, அல்பீசியாவோ, ரப்பரோ பயிரிடுவதைத் தடை செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, நான் மூலக் கேள்விக்கு விடை அளிக்கும்போது குறிப்பிட்டதைப் போல 38.87 ஹெக்டேரில்தான் இதுபோல ரப்பர் போன்றவைகள் பயிரிடப்படுகின்றன என்றும் நெல் பயிரிடும் நிலத்தின் அளவு 46,280 ஹெக்டேர் என்றும் தகவல்கள் உள்ளன. ஆகவே, பிரச்னை சிறியதாக இருக்கிற காரணத்தாலே, இதைப்பற்றி முயற்சி மேற்கொள்ளத் தேவையில்லையென கருதுகிறேன்.

திரு. டி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் அந்தப் பதிலைத்தான் சொன்னார்கள். ஆனால், அங்கு இப்பொழுதிருக்கிற நிலைமை அவ்வாறில்லை. நெல்லை சாகுபடி செய்கின்ற இடத்தில் நெல்லை மட்டும் அல்ல அவர்கள் பயிரிடுவது, அல்பீசியா போடுகிறார்கள், பரவலாகத் தென்னைப் பயிரிடப்படுகிறது, ஏற்கனவேநெல்பற்றாக்குறையாகஇருக்கிறது.முறையாகதண்ணீர் கிடைக்கிற பகுதி, ஒரு போக சாகுபடி என்றாலும் பரவாயில்லை. இருபோகம் சாகுபடி செய்கின்ற, தண்ணீர் முறையாக கிடைக்கின்ற அந்தப் பகுதிகளிலே பரவலாக, இப்பொழுது நோய் பரவுகிறமாதிரி, இந்தப் பணப் பயிர்கள் பயிர் செய்யப் படுகிறது. ஆகவே, தடை செய்யவில்லையென்றால், எதிர் காலத்தில், பற்றாக்குறை பகுதியாக இருக்கிற அந்தப் பகுதியில் மீண்டும் பற்றாக்குறை ஏற்படும். ஆகவே, அதை கவனத்தில் கொண்டு மீண்டும் மறுபரிசீலனை செய்து, பணப்பயிர்கள் பயிரிடுவதை தடை செய்ய முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, மாநில அளவிலே நெல்லுக்குப் பற்றாக்குறை என்பது அல்ல. அவர்கள் மாவட்டத்தைப் பொறுத்த அளவிலே குறிப்பிட்டுச் சொல்கிறார்கள். அதுவும் அவர்கள் மூலக் கேள்வியிலே ரப்பரை மட்டுமே கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். ரப்பரைப் பொறுத்த வரையிலே, நெல்லின் மூலம் கிடைக்கின்ற வருமானத்தைக் காட்டிலும், அதிகமான அளவுக்கு வருமானத்தைப் போடக்கூடிய விவசாயிகளுக்குக் கிடைக்கிறது. ஆண்டில் இரண்டு மாதங்கள் தவிர மற்ற மாதங்களில் வருமானம் கிடைக்கிறது. ஆகவே, வைகளையெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கிறபொழுது விவசாயிகளின் வருமானத்தையும் கணக்கில் கொண்டு செயல்பட வேண்டியிருக்கிறது. வேறு சில விளைபொருள்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அவ்வாறு இருக்குமானால் அரசு அதைப்பற்றி ஆராயும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இன்று இந்த விஷயத்திலே நடவடிக்கை தேவையில்லை என்று சொன்னார்கள். அது சரியல்ல. பணப் பயிரான இரப்பர் பயிரிட்டால் அதிகமாக இலாபம் கிடைக்கிறது என்பதால் வசதியுள்ளவர்கள் அவர்களுடைய நிலங்களில் இரப்பரைப் பேறுடுவதால் பக்கத்தில் இருக்கும் ஏழைகள் நெல் பயிரிடுவதற்கு முடியாத நிலைமை ஏற்படுகிறது. இரப்பர் ஷேடோவின் காரணமாக ஏழைகளின் வயல்களில் நெல் பயிரிட முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இது பரவக் கூடிய நிலையிலே அமைச்சரவர்களே கூறியதைப்போல அதிகமான வருவாய் இரப்பரிலே கிடைக்கிறது என்ற காரணத்தினாலே சானல் புரவுகளில்கூட ஏழை விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற நிலையைப் பரிசீலனை செய்து இப்படி வயல்களிலே, குறிப்பாக சானல் புரவுகளிலே இரப்பர் பயிரிடுவதைத் தடுப்பதற்கான சட்டமியற்ற அரசு நடவடிக்கையெடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, வந்திருக்கின்ற தகவலின்படி பெருமளவு பாதிப்பு இல்லை என்று அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வசதியானவர்கள் இரப்பர் பயிரிடுவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதனால் பக்கத்தில் உள்ள ஏழை விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் தெரிவித்திருக்கிறார்கள். அதுபற்றி அரசு ஆராயும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் அவருக்கு வந்திருக்கின்ற தகவலின்படி சின்ன அளவில் தான் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று கூறுகிறார்கள். இது சம்பந்தமாகப் பல விவசாயிகள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், அரசுக்கும் மனுக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அது அரசின் பரிசீலனையில் வரவில்லையா? மீண்டும்

இதுசம்பந்தமாகப் பரிசீலனை செய்து இப்படி இரப்பர் பயிரிடப் பட்டு ஏழைகளைப் பாதிக்கும் நிலையைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, இது வரைக்கும் அம்மாதிரி புகார் எதுவும் வரவில்லை. வேண்டு மானால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்திருக்கின்ற கருத்துக்களின் அடிப்படையில் அரசு ஆராயும்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நஞ்சை நிலங்களில் இரப்பர் மட்டுமல்ல; சில பகுதிகளில் நெல்லுக்கான உற்பத்தி விலை சரியாகக் கிடைக்கவில்லை என்ற காரணத்தால் சவுக்கு போட்டு பலன் அடைய விரும்புகிறார்கள். இப்படி மற்றப் பொருட்களைப் பயிரிடுவதால் உணவு உற்பத்தி அதனால் பாதிக்கப்படும் என்பதால் நெல் பயிரிடுகின்ற இடத்தில் வேறு எந்தப் பயிரும் பயிர் செய்யக்கூடாது என்று அரசு தடை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, அவ்வாறு கட்டுப்படுத்த இயலாது. கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கே இரப்பர் பயிரிடப் படுகிறது என்கின்ற வகையில் மூலக் கேள்வி கேட்கப்பட்டிருக் கிறது. வேறு இடத்தில் ஏதாவது புகார் இருந்தால் அதைக் குறித்து அந்தக் குறிப்பிட்ட புகாருக்குரிய இடத்தைப் பற்றி ஆராயலாம்.

திரு. மு. அம்பிகாபதி: சவுக்கு ஒரு கிலோ 55 காசாகவும், வேலிக்கருவு ஒரு கிலோவிற்கு 45 காசாகவும், கரும்பு ஒரு கிலோ 18 அல்லது 20 காசாகவும் இருக்கிறது. விவசாயிகள் எதைப் பயிரிடுவார்கள் என்று அமைச்சரவர்களை வினவ விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே. கேள்வி இரப்பரைப் பற்றியது. சவுக்கையும் கரும்பையும் இரப்பரா இழுத்தால் நான் பதில் சொல்ல முடியாது.

குண்டாற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டும் திட்டம்

*வினா எண். 537— திரு. எம். பிச்சை: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:—